# வினைத்திறன் மிக்க வளமுகாமைத்துவம் பாடசாலை விளைதிறனில் ஏற்படுத்தும் தாக்கம்

சந்துரு மரியதாஸ்
கல்வி, பிள்ளை நலத்துறை, கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
chandrumariyadas@yaoo.com

***ஆய்வுச்சுருக்கம்***

*ஒரு நிறுவனத்தின் வெற்றியில் தரமான உள்ளீடுகள், வினைத்திறனான செயற்பாடுகள் காணப்படும் போதே வெளியீடுகள் தரமானதாக காணப்படும். பாடசாலை மட்டத்தில் தரமான வளங்கள் உள்ளீடு செய்யப்படுதல் குறைவாகக் காணப்படுகின்றது. ஏனெனில் பாடசாலையில் வளப்பற்றாக்குறை நிலவுவதோடு வளங்கள் உரிய அதிகாரிகளினால் பாடசாலைகளுக்கு முறையாக பங்கிடப்படாமலும் காணப்படுகின்றது. இதனால் மாணவர்களினுடைய அடைவுமட்டமானது வீழ்ச்சி அடைகின்றது. அந்தவகையில் ஆய்வுக்காக தெரிவு செய்த பிரதேசத்தில் வளப்பற்றாக்குறை நிலவுவதோடு மாணவர்களின் அடைவுமட்டமும் வீழ்ச்சியடைந்த நிலையில் காணப்படுகின்றது. இதன் காரணமாக பாடசாலையில் காணப்படும் வளப்பற்றாக்குறைவிற்கும் மாணவர்களின் அடைவுமட்டத்திற்கும் இடையிலான தொடர்பினை கண்டறிதல் எனும் பொதுநோக்கில் இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டது. ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட மண்முனை தென்மேற்கு கோட்டத்தில் 21 பாடசாலைகள் காணப்படுகின்றன. அதிகஷ்ட பிரதேச பாடசாலைகள் மூன்றும் கஷ்ட பிரதேச பாடசாலைகள் ஏழும் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அதிபர்கள் எவ்வித மாதிரி தெரிவுமின்றி நேரடியாகப் 10 பாடசாலையின் 10 அதிபர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆசிரியர்கள் (3:1) விகிதத்தில் இலகு எழுமாற்று மாதிரி அடிப்படையில் 98 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டனர். சிரேஷ்ட இடைநிலை மாணவர்கள் ஒரு பாடசாலையிலிருந்து 10 பேர் என்ற அடிப்படையில் 100 மாணவர்கள் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்வாய்வின் மூலம் பெறப்பட்ட முடிவுகளாக ஆசிரியர் வளப்பற்றாக்குறை அத்தோடு பௌதீக வளப்பற்றாக்குறை நிலவுவதோடு இவை மாணவர்களின் பாவனைக்கு உட்படும் வகையில் காணப்படாத நிலையும் இனங்காணப்பட்டுள்ளது. இத்தகைய வளப்பற்றாக்குறை ஏற்படுவதற்கான முக்கியமான காரணங்களாக வளத் தேவைகள் சரியான முறையில் இனங்காணப்படாமை, மாகாணசபைகள் முறையாக செயற்படாமை, கல்வி அதிகாரிகளின் அசமத்துவப் போக்கு என்பனவாகும். மாணவர்களின் அடைவுமட்டமானது குறைவடைந்து செல்கின்றது என்பதை அதிபர் பகுப்பாய்விற்கு உட்படுத்தி அதனை உயர் அதிகாரிகளிடம் சமர்ப்பித்து தேர்ச்சி பெற்ற ஆசிரியர் வளங்களைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.கல்வித்திணைக்களங்கள் வினைத்திறனாக செயற்படுவதன் ஊடாக வளங்களை முறையாக பங்கிடுவதன் மூலம் மாணவர்களின் அடைவுமட்டத்தை அதிகரிக்க முடியும் போன்ற விதந்துரைப்புக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.*

***திறவுச்சொற்கள் (Keywords):*** *வினைத்திறன், வளமுகாமைத்துவம்,பாடசாலை விளைதிறன், அடைவுகள்*

## 1. அறிமுகம்

கல்விச் செயற்பாடு இன்று முன்னர் இருந்ததை விடச் சிக்கலான ஒரு செயற்பாடாக மாறியுள்ளது. கல்வியின் நோக்கங்கள் மாற்றமடைந்துள்ளன. புதிய அறிவுக் களஞ்சியம் உலகம் முழுவதும் பரந்து காணப்படுகின்றது. இன்றைய உலகில் கல்வி கற்கும் மாணவன் நவீன தொழிநுட்ப முறைகளையும் விஞ்ஞானத்தையும் பயன்படுத்தி புதுப்புது வளங்களை இனமறிந்து அவற்றைப் பயன்படுத்தி அதிகரித்து வரும் அறிவைப் பெற்றுக் கொள்ள முயற்சி செய்ய வேண்டியுள்ளது. இவ்வாறான வளங்கள் தனித்தனி அடையாள நிலைகளைக் கொண்டிருந்தாலும், இவை இணைந்து முறையாகப் பாடசாலையினால் நிர்வாக முகாமைத்துவம் மேற்கொண்டு கற்றல், கற்பித்தலில் பயன்படுத்துகின்ற போதே உச்ச பயனையும் கல்விச் செயற்பாட்டில் உச்ச பெறுபேற்றுப் பிரதிபலிப்பையும் அடைய முடியும். இவை முறையாக ஒழுங்கமைத்துப் பிரயோகிக்கப்படாவிட்டால் பாடசாலையின் அடைவுமட்டம் வீழ்ச்சி நிலையிலே காணப்படும் என்பதோடு விளைதிறன் பாடசாலையாக மிளிராது. பாடசாலைகள் ஒவ்வொன்றும் விளைதிறன் பாடசாலைகளாக மிளிர வேண்டுமானால் வளங்கள் சமமாகப் பங்கிடப்பட வேண்டும். கல்விச் சீர்திருத்தங்களில் வளங்கள் சமமாகப் பங்கிடப்பட வேண்டும் எனக் குறிப்பிடுகின்றனரே தவிர சமமாக பங்கிடப்படுகின்றதா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. ஏனெனில் நவீன இலத்திரனியல் தொழிநுட்ப உலகை நோக்கிய பயணத்தில் இலங்கையும் வீறுநடை போடுகின்ற போதிலும் அதிகஷ்ட பிரதேசத்தில் காணப்படும் மாணவர்களுக்கு கணனி அறிவு எட்டாக்கனியாகவே உள்ளது. இவ் ஆய்வின் ஊடாக பாடசாலையில் காணப்படும் வளப்பற்றாக்குறைகளையும், அவற்றுக்கான காரணங்களையும், தீர்வுகளையும் இனங்காண்பதன் ஊடாக அடைவுமட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளையும், அடைவு மட்டத்தினை அதிகரிப்பதில் வளப்பற்றாக்குறைவினால் எதிர்கொள்ளும் சவால்களையும், வளங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளையும், வினைத்திறனான வளப்பாவனையினூடாக அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான வழிமுறைகளையும் இனங்காண்பதோடு பாடசாலையானது சமூகத்தின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் உயிரோட்டமாக செயற்பட வளங்கள் அவசியம் என்பதை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பணியாளர்கள், கல்வி அதிகாரிகள், வளப்பங்கீட்டாளர்கள் அறிந்து கொள்ளவும் உதவுகின்றது.

### 1.1 ஆய்வுப் பின்னணி

ஓர் பிரதேசமானது வளர்ச்சியடைய வேண்டுமெனில் அப் பிரதேசத்தில் காணப்படும் பாடசாலைகளில் வழங்கப்படும் கல்வியானது தரமுடையதாக விளங்க வேண்டும். தரமான கல்வியினை வழங்குவதற்கு வினைத்திறனான செயற்பாடு பாடசாலையில் இடம்பெற வேண்டும். ஆனால் இப் பிரதேசம் எவ்வாறு பின்தங்கி காணப்படுகின்றதோ அவ்வாறே பாடசாலையும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. அதாவது பாடசாலைகளின் பரீட்சைப் பெறுபேறுகளின் அடைவுமட்டம், இணைப்பாட

விதான செயற்பாடுகளின் அடைவுமட்டம் என்பன வீழ்ச்சி நிலையிலே காணப்படுகின்றது. இதற்கு பாடசாலையில் காணப்படும் சவால்களே முக்கிய காரணமாகும். அதாவது வளங்கள் உச்ச அளவில் பயன்படுத்தப்படாமை, வளங்கள் பற்றாக்குறையாக காணப்படுகின்றமை போன்றவற்றைக் குறிப்பிட முடியும். வளங்கள் பற்றாக்குறையாகக் காணப்படுவதற்கு வளங்கள் சமமாகப் பங்கிடப்படாமை முக்கிய காரணியாகும். இத்தகைய காரணிகளால் மாணவர்கள் கற்றலை சிறப்பாக மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டு அடைவுமட்டமானது வீழ்ச்சி நிலையில் காணப்படுகின்றது என்பதை இனங்காணல் இவ்வாய்விற்கான பின்னணியாகும்.

## 1.2 ஆய்விற்கான நியாயம்

கற்றலுக்கும், கற்பித்தலுக்கும் ஏற்ற சாதகமான சூழல் காணப்படும் போது தான் கற்றலில் சிறந்த வெளியீட்டினைப் பெறமுடியும். கற்றல், கற்பித்தல் செயற்பாட்டிற்கு அடிப்படையாக அமைவது வளங்களாகும். நகரப்புறப் பாடசாலைகளில் வளங்கள் பாவனைக்கு அதிகமாகக் காணப்படுகின்றது. ஆனால் ஆய்வுக்கு தெரிவு செய்த பிரதேசம் கிராமமாக் காணப்படுவதால் வளங்கள் பற்றாக்குறைவாகவே காணப்படுகின்றன. வளப்பற்றாக்குறை நிலவுவதற்குச் சமமான வளப்பாய்ச்சல் இன்மை, ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட பங்கீடுகள் பற்றிய அட்டவணைகள் கவனத்திற்கு எடுக்கப்படாமல் அவசரமாகவும் தனிப்பட்ட செல்வாக்கின் அடிப்படையிலும், தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்கமையவும், இன, சாதி, சமய அடிப்படையிற் கூட பங்கீடுகள் மேற்கொள்ளப்படுதல், காலத்திற்குக் காலம் பணிப்பாளராகவும், அபிவிருத்திக்கப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளரும், கோட்டக்கல்வி அலுவலகரும், கணக்காளரும் நடுநிலையாக நின்று பாடசாலையின் பருமன் தேவையின் அடிப்படையில் பங்கீடு செய்யாது விடுதல் போன்ற பல்வேறு காரணங்களை குறிப்பிட முடியும். அந்த வகையில் பாடசாலையில் காணப்படும் வளப்பற்றாக்குறைகளையும் அவற்றிற்கான காரணங்களையும் கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கான ஆலோசனைகளையும் வழங்குவதற்கு இவ் ஆய்வானது நியாயமுடையதாகக் காணப்படுகின்றது.

## 1.3 ஆய்வுப் பிரச்சினை

ஆய்வின் களமாக விளங்குவது மண்முனை எனும் படுவாங்கரைப் பிரதேசமாகும். இது நீண்ட கால யுத்தத்தின் முடிவிற்குப் பின்னர் அண்மைக் காலங்களிலே அபிவிருத்தி அடைந்து வரும் கஷ்டப் பிரதேசங்களையும், நிலையான அபிவிருத்தி எதையும் காணாத அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளையும் உள்ளடக்கியுள்ளது. இதன் காரணமாக கல்வியில் பின்தங்கிய நிலையில் வெளிக்காட்டப்படாத சமூகமாகவே இவை விளங்குகின்றது. இன்றையப் பாடசாலைக் கல்வியின் நோக்கம் மாணவரிடத்து அறிவு, திறன், மனப்பாங்கு என்பனவற்றில் நிரந்தர நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துவதாகும். இவற்றினை ஏற்படுத்தும் வினைத்திறனான களமும், வழிகாட்டிடமும் பாடசாலை எனலாம். பாடசாலையில் வளங்கள் பற்றாக்குறையாகக் காணப்படும் போது இவற்றினை மாணவர்களிடத்து ஏற்படுத்த முடியாது. இதன்

காரணமாக கற்றல், கற்பித்தல் பின்னடைகின்றது. அந்தவகையில் வளப்பற்றாக்குறை என்பது ஆய்விற்கான முக்கிய பிரச்சினையாக காணப்படுகின்றது. எனவே பாடசாலையின் வளப்பற்றாக்குறைவானது மாணவர்களின் அடைவுமட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

## 1.4 ஆய்வு நோக்கம்

❖ **பொது நோக்கம்**

பாடசாலையில் காணப்படும் வளமுகாமைத்துவம் மாணவர்களின் அடைவு மட்டத்திற்கும் இடையிலான தொடர்பினைக் அறிதல்.

❖ **விசேட நோக்கங்கள்**

1. பாடசாலைகளில் காணப்படும் வளப்பற்றாக் குறைகளையும் அவற்றுக்கான காரணங்களையும் இனங்காணல்.
2. அடைவுமட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளையும் அடைவுமட்டத்தினை அதிகரிப்பதில் எதிர் கொள்ளும் சவால்களையும் கண்டறிதல்.
3. பாடசாலைக்குத் தேவையான வளங்களின் முக்கியத்துவத்தையும் அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான வழிமுறைகளையும் பகுப்பாய்வு செய்தல்.
4. பாடசாலையின் வினைத்திறனான வளப்பாவனையினூடாக அடைவு மட்டத்தினை உயர்த்துவதற்கான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் இனங்காணல்.

## 2. இலக்கிய மீளாய்வு

இலக்குகளை அல்லது நோக்கங்களை வெளியீடாக அடைந்து கொள்வதற்காகப் பயன்படுத்தப்படுவதனையே வளங்கள் எனலாம். கல்விச் செயற்பாடுகளோடு தொடர்புபடும் வளங்கள், கல்விக்கான வளங்கள் என்று பொதுவாகக் கண்டாலும் அடிப்படையான வளங்களை வகுப்பாக்கம் செய்து கல்வியளாலர்கள் வரிசைப்படுத்தியும் உள்ளார்கள். பௌதீகவளம், மனிதவளம், நிறுவனவளம், நிதிவளம் என அவற்றை இனங் காணலாம். இவ் வளங்கள் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டினை வீரியப்படுத்த பாடசாலையோடு இணைந்து பாடசாலைக்கு உள்ளேயும், பாடசாலைக்கு வெளியேயும் இயங்கு நிலைகளைக் கொண்டுள்ளன. இவ் வளங்களைப் பாடசாலை நிர்வாகம் முகாமை செய்து கையாளும் போது உச்ச பயனையும் கல்விச் செயற்பாட்டில் உச்ச பெறுபேற்றுப் பிரதிபலிப்பையும் அடைய முடியும். (சுமதி, 2012)

நாட்டின் சகல பாடசாலைகளிலும் நகர, கிராமப்புற வேறுபாடுகளின்றி வளங்களின் சம பங்கீடு இடம் பெறுவதற்கேற்ற வகையிலான கல்வி வாய்ப்புக்களை உறுதிப்படுத்தல் வேண்டும். குறிப்பாக பின்தங்கிய கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கல்வி மூல வளங்கள்,நூலகம், கற்றலுக்கான வள நிலையங்கள், ஆய்வு கூடங்கள், விளையாட்டு மைதானங்கள், தளபாடங்கள், தராதரமுள்ள ஆசிரிய வளங்கள், பாடநூல் விநியோகம், கற்பித்தல் சாதனங்கள், கட்புல செவிப்புல சாதன வசதிகள் என்பவற்றைப் பாரபட்சமின்றி வழங்குவதனூடாக கல்வியில் சமமான பரம்பலை ஏற்படுத்துவதுடன் கிராமப்புற

மாணவர்களின் கல்வி அடைவையும் மேம்படுத்தலாம். (அனந்தராஜ், 2005)

## 3. ஆய்வு முறையியலும் வடிவமைப்பும்

இவ்வாய்வினை மேற்கொள்வதற்குத் தயாரிக்கப்பட்ட ஆய்வுக் கருவிகளாக வினாக்கொத்து, நேர்முகங்காணல், அவதானம், ஆவணங்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. அதிபரிடமிருந்து வினாக்கொத்து, நேர்காணலினூடாகவும் ஆசிரியர்கள், மாணவர்களிடமிருந்து வினாக்கொத்தின் மூலமாகவும் தரவுகள் பெறப்பட்டுள்ளன. பெறப்பட்ட தரவுகள் பகுப்பாய்விற்குட்பட்டு முடிவுகள் பெறப்பட்டு தீர்வுகளும் ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

### 3.1 மாதிரித் தெரிவு

ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட மண்முனை தென்மேற்கு கோட்டத்தில் 21 பாடசாலைகள் காணப்படுகின்றன. அதிகஷ்ட பிரதேச பாடசாலைகள் மூன்றும் கஷ்ட பிரதேச பாடசாலைகள் ஏழும் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. பாடசாலைகளை தெரிவு செய்யும் போது சிரேஷ்ட இடைநிலை பிரிவு வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகள் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் 1AB பாடசாலைகள் இரண்டும் 1C பாடசாலைகள் மூன்றும் Type 2 பாடசாலைகள் ஐந்தும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலைகளிலிருந்தும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆய்வு நோக்கத்தை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் இலகு எழுமாற்று மாதிரியைப் பயன்படுத்தி தெரிவு செய்யப்பட்டுள்ளன. அதிபர்கள் எவ்வித மாதிரி தெரிவுமின்றி நேரடியாகப் 10 பாடசாலையின் 10 அதிபர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆசிரியர்கள் (3:1) விகிதத்தில் இலகு எழுமாற்று மாதிரி அடிப்படையில் 98 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டனர். சிரேஷ்ட இடைநிலை மாணவர்கள் ஒரு பாடசாலையிலிருந்து 10 பேர் என்ற அடிப்படையில் 100 மாணவர்கள் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### 3.2 தரவுப் பகுப்பாய்வும் வியாக்கியானமும்


வினாக்கொத்திலுள்ள வினாக்களுக்கான தரவுகள் அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதுடன் இவ் ஆய்வின் பகுப்பாய்வு முறையானது முன்னம் பின்னமாக பல செயற்பாடுகளைக் கொண்டமைந்துள்ளது. தரவு வடிவங்களைத் தெரிவு செய்து தரவுகளைச் சேகரித்ததன் பின்னர் அத் தரவுகளை பகுப்பாக்கம் செய்யப்பட்டு குறித்துக் காட்டப்பட்டுள்ளது. தரவுப்பகுப்பாய்வானது விசேட நோக்கத்திற்கு ஏற்ப ஆய்வு வினாக்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஆய்வுக் கருவிகளின் மூலம் பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டமைகின்றது. வினாக்கொத்தின் ஊடாக மாணவர்களிடமும், ஆசிரியர்களிடமும், அதிபர்களிடமும் பெறப்பட்ட தரவுகள் எண்சார் தகவல்களாக மாற்றப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணையாக்கம், முப்பரிமான வரிபடம், சலாகை வரைபுகள் ஊடாக

புள்ளிவிபரங்களின் வாயிலாக விளக்கப்படுகின்றது. பகுப்பாய்வுக்காக MicroSoft Excel 2013 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

## 4. தரவுப்பகுப்பாய்வு முடிவுகள்

### 4.1 பாடசாலையில் காணப்படும் வளப் பற்றாக்குறைகளும் அவற்றுக்கான காரணங்களும்

ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. இதனை பின்வரும் உருவின் ஊடாக அறியலாம்.




**உரு 4.1 அனைத்து பாடங்களுக்கும் ஆசிரியர்கள் காணப்படுகின்றனர்**

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு, கணக்கியல், விவசாய விஞ்ஞானம், சங்கீதம், நடனம், சித்திரம், நாடகமும் அரங்கியலும், தகவல் தொழிநுட்பம், சிங்களம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது.கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சிங்களம், வரலாறு, சங்கீதம், சித்திரம் போன்ற பாடங்களுக்கு தேர்ச்சி பெற்ற ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. ஆசிரியர் வளப்பற்றாக்குறை நிலவுவதற்குரிய முக்கியமான காரணங்களாக ஆசிரியர் வளத் தேவைகள் சரியான முறையில் இனங்காணப்படாமை, பொருத்தமான ஆசிரியர்கள் நியமிக்கப்படாமை, மாகாண சபைகள் முறையாக செயற்படாமை, பொருத்தமான ஆசிரியர் வளப்பங்கீடு இன்மை,

பாடசாலைகள் அதிகஷ்ட, கஷ்டப் பிரதேசங்களில் அமைந்துள்ளமை, கல்வி அதிகாரிகளின் அசமத்துவப் போக்கு, புதிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டமை என்பனவாகும்.

**அட்டவணை 4.1 கணித பாட க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள்**

| பாடசாலை | பரீட்சை ஆண்டுகள் | | | | |
|---|---|---|---|---|---|
| | **2017** | **2016** | **2015** | **2014** | **2013** |
| **A** | **42 %** | 37.5 % | 8.33 % | 64 % | 83.33 % |
| B | 45.45 % | 0% | 100 % | 54.54 % | 33.3% |
| C | 36.84% | 50% | 33.33% | 6.6% | 36% |
| D | 37.5% | 33.3% | 66.60% | 66.66% | 90% |
| E | 47.82% | 20.6% | 37.43% | 68.42% | 60% |

பாடரீதியில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களில்லாத பாடங்களுக்கு குறிப்பிட்ட பாட ரீதியில் தேர்ச்சி பெறாத ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர். இதனால் மாணவர்களின் அடைவுமட்டமானது குறைவடைந்த நிலையில் காணப்படுகின்றது. மேலும் ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் பௌதீக வளங்கள் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றது.

**அட்டவணை 4.2 பௌதீக வளங்கள் போதுமான அளவு காணப்படுகின்றது**

| பௌதீக வளங்கள் | ஆம் | இல்லை | ஓரளவு |
|---|---|---|---|
| கட்டிடங்கள் போதுமானளவு காணப்படுகின்றது. | 23% | 46% | 31% |
| பாவனைக்கு உட்படும் வகையில் விளையாட்டு மைதானம் காணப்படுகின்றது. | 29% | 21% | 50% |
| பாவனைக்கு உட்படும் வகையில் நூலக வசதி காணப்படுகின்றது. | 0% | 79% | 21% |
| நீர், மலசலகூட வசதி காணப்படுகின்றது. | 0% | 43% | 57% |
| பாவனைக்கு உட்படும் வகையில் விஞ்ஞான ஆய்வுகூடம் காணப்படுகின்றது. | 0% | 65% | 35% |
| பாவனைக்கு உட்படும் வகையில் கணனிக்கூடம் காணப்படுகின்றது. | 31% | 44% | 26% |
| செயற்பாட்டறைகள் காணப்படுகின்றது. | 0% | 63% | 37% |
| தளபாடங்கள் போதமானளவு காணப்படுகின்றது. | 31% | 43% | 29% |

ஆசிரியர்கள் கற்பித்தல் உபகரணங்களை பயன்படுத்தாமைக்கான முக்கிய காரணங்களாக பாடசாலைகளில் கற்பித்தல் உபகரணங்கள் போதியளவு காணப்படாமை, குறிப்பிட்ட பாடத்தில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் கற்பிக்காமை, நவீன கற்பித்தல் உபகரணங்களை பயன்படுத்தத் தெரியாமை என்பனவாகும். பௌதீக வளப்பற்றாக்குறை ஏற்படுவதற்கான காரணங்களாக தேவைகள் சரியான முறையில் உரிய அதிகாரிகளால் இனங்காணப்படாமை, பாடசாலை அமைந்த சூழல் என்பனவாகும்.

### 4.2 அடைவுமட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளும் அடைவுமட்டத்தினை அதிகரிப்பதில் எதிர் கொள்ளும் சவால்களும்

பௌதீக வளப்பற்றாக்குறைவினால் கற்பித்தலை சிறப்பாக மேற்கொள்ள முடியாதுள்ளது. வளப்பற்றாக்குறைவினால் குறிக்கோள், தேர்ச்சி மட்டங்கள் என்பவற்றை உரிய காலத்தில் அடைய முடியாதுள்ளது. புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள், க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள், இணைப்பாட விதான செயற்பாடுகளின் அடைவுமட்டம் என்பன திருப்தி அளிக்கக் கூடிய வகையில்

காணப்படவில்லை.க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் கணிதம், விஞ்ஞானம், வரலாறு, ஆங்கிலம் ஆகிய பாடங்களின் அடைவுமட்டம் வீழ்ச்சி நிலையில் காணப்படுகின்றது.


**அட்டவணை 4.3 கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள்**

| பாடசாலை | சித்தியடைந்தோர் வீதம் | | | | |
|---|---|---|---|---|---|
| | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 |
| A | 40% | 32% | 28.84% | 19.69% | 63.63% |
| B | 47.84% | 20.68% | 33.33% | 55% | 60% |
| C | 18% | 68% | 45.45% | 30% | 64.41% |
| D | 42.25% | 37.5% | 8.33% | 9% | 25% |
| E | 25% | 8% | 100% | 54.54% | 0% |

மாணவர்களின் அடைவுமட்டம் குறைவடைவதற்கான காரணங்களாக பௌதீக வளப்பற்றாக்குறை, ஆசிரியர் வளப்பற்றாக்குறை, கற்பித்தல் முறையில் காணப்படும் குறைபாடுகள், ஆசிரியர்கள் கற்பித்தலில் ஆர்வம் செலுத்தாமை, பாடசாலைகள் அதிக தூரத்தில் காணப்படுதல் என்பனவாகும்.

## 4.3 பாடசாலைக்குத் தேவையான வளங்களின் முக்கியத்துவமும் அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான வழிமுறைகளும்

கற்பித்தலை சிறப்பாக மேற்கொள்ளவும் மாணவர்கள் பூரணமான விளக்கத்தினை பெறுவதற்கும் வளங்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. வகுப்பறைச் சூழல் கற்றலை மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் காணப்படவில்லை என்பதனை இவ் உருவின் ஊடாக அறியலாம்.





**உரு 4.3 வகுப்பறைச் சூழல் கற்றலை மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் காணப்படுகின்றது.**

நிதி வளமானது பௌதீகப் பொருட்களை பெற்றுக் கொள்ளவும் பாட ரீதியில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. அதிபர்கள்

வளங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளை குறைந்தளவே தெரிந்து வைத்துள்ளனர். பாடத்திற்குத் தேவையான வளங்களை கல்வித் திணைக்களம், தனியார் நிறுவனங்கள், சமயத்தளங்கள், நன்கொடையாளர் போன்றவர்களிடமிருந்து போதியளவு பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது

**. 4.4 பாடசாலையின் வினைத்திறனான வளப்பாவனையின் ஊடாக அடைவுமட்டத்தினை உயர்த்துவதற்கான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும்**




**உரு 4.4 வளங்கள் வினைத்திறனாக பயன்படுத்தப்படுகின்றது**

வினைத்திறனாக வளங்களை பயன்படுத்துவதன் ஊடாக அடைவுமட்டத்தினை அதிகரிக்க முடியும். வழிகாட்டல் ஆலோசனைப் பிரிவு

## 5 தீர்வுகளும், ஆலோசனைகளும்

### 5.1 வினைத்திறன் தன்மைகளை அதிகரிப்பதற்கான தேவைகளும் நோக்கங்களும்

1. பாடசாலைகள் வினைத்திறன் மேம்பாட்டில் அக்கறைகொள்ளாமை
2. வளமுகைமைத்துவத்தில் அசமந்தப்போக்கு காணப்படுதல்

### விதந்துரைப்புக்கள்

பாடசாலைகளில் எவ்வளவுதான் வளங்கள் காணப்பட்டாலும் அவற்றினைக் கொண்டு கல்வி அடைவுகளை சாத்தியப்படுத்த வேண்டும் எனில் பாடசாலைகளின் உள்ளாகக்காணப்படும் வள காணப்படவில்லை. கட்டடங்கள் குறைவாகக் காணப்படும் பாடசாலைகளில் கூடாரங்கள், மரநிழலின் கீழ் வைத்து கற்பித்தல் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறான முடிவுகள் பெறப்பட்டன.
உபயோகத்தினை அதிகரிக்க வேண்டும். குறைந்த வளம் காணப்பட்ட போதிலும் அதனை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கான செயற்பாடுகளை அதிபா் தனக்கு கீழ் பணிபுரியும் கல்வி சாா் மற்றும் கல்வி சாரா ஊழியா்களிடம் பணிப்புரை விடுப்பதோடு வளமுகாமைத்துவம் தொடா்பான சிறந்த மேற்பாா்வைகளையும் நடாத்தவேண்டும். பழைய ஆசிரியா்களிடம் தொழில்நுட்பப்பாவனையை அதிகரிக்கச் செய்தல். அனைத்து வகுப்புக்களிலும் ஒரேவிதமான வளப்பயன்பாட்டினை நடைமுறைப்படுத்தல். வளங்களைப் பாவிக்காமல் வைப்பதனை முற்றாகக் குறைத்தல். முடியுமானவரை பாடசாலையில்

உள்ள வளங்களைக்கொண்டே கல்வி நடவடிக்கைகளை மேலோங்கச் செயதல்.

**5.2 பாடசாலையில் காணப்படும் வளப்பற்றாக்குறைகளும் அவற்றுக்கான காரணங்களும்**

1. வளப்பற்றாக்குறையைக் கண்டறிவதில் அசமந்தப்போக்கு
2. ஆசிரியர் வளப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதில் அதிகாரம் இன்மை.

**விதந்துரைப்புக்கள்**

பாடசாலையில் காணப்படும் வளப்பற்றாக் குறைகளையும் வளப்பற்றாக் குறைகள் ஏற்படுவதற்கான காரணங்களை அதிபர் கண்டறிதல் வேண்டும். மேலும் பாடசாலைக்குத் தேவையான வளங்களை உரிய அதிகாரிகளிடம் குறிப்பிட்டு பெற்றுக் கொடுத்தல் வேண்டும். கல்வித் திணைக்களங்கள் வளப்பங்கீட்டினை முறையாகப் பேண வேண்டும். நகர்ப்புற, கிராமப்புற வேறுபாடின்றி அனைத்து மாணவர்களும் நலன்களைப் பெறும் வகையில் வளப்பங்கீட்டினை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும். பெற்றோர்களினதும் சமூகத்தினதும் ஒத்துழைப்பைப் பெறும் வகையில் விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்துதல் வேண்டும். ஆசிரியர்களை பாடசாலைகளுக்கு அனுமதிக்கும் போது அருகாமையில் வசிக்கும் ஆசிரியர்களை நியமித்தல் வேண்டும்.

**5.3 அடைவுமட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளும் அடைவுமட்டத்தை அதிகரிப்பதில் எதிர்கொள்ளும் சவால்களும்**

1. வளங்களுக்கும் அடைவுமட்டத்திற்கும் தொடர்புகள் காணப்படுகின்றமை.
2. ஆசிரியர் பற்றாக்குறைகள் காணப்படுகின்றமை.

**விதந்துரைப்புக்கள்**

பாடசாலைக்குத் தேவையான அனைத்து வளங்களையும் பெற்றுக் கொடுப்பதன் ஊடாக மாணவர்களின் அடைவுமட்டத்தை அதிகரிக்க முடியும். பாட ரீதியில் தேர்ச்சி பெறாத ஆசிரியர்களுக்கு அத்துறை சார்ந்த வளவாளர்களைக் கொண்டு கருத்தரங்குகளை நடாத்துதல். கல்வியமைச்சு உள்வாரி, வெளிவாரியான பரிசோதனை, கண்காணிப்பு, வழிகாட்டல்களை பாடசாலை ரீதியாக நடத்த வேண்டும். ஆசிரியர் கற்பித்தல் பணியை தரங்கணிப்பு முறையில் மதிப்பிட்டு பதவி உயர்வுகள் வழங்கப்படல் வேண்டும். ஆர்வமற்றோர், அதிக வரவின்மை உள்ளோர் வேறு திணைக்களங்களுக்கு மாற்றப்படல் வேண்டும். பாடசாலைகளை ஒன்றாக இணைத்து வளவாளர்களைக் கொண்டு கருத்தரங்குகளை நடத்துதல். பாடசாலைச் சமூகத்துடன் சுமூகமான உறவைப் பேணுவதன் ஊடாக பாடசாலைச் சமூகத்தில் காணப்படும் பாட ரீதியில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை அழைத்து கற்பித்தலை மேற்கொள்ளல். இவர்களுக்குரிய நிதியினை தனியார் நிறுவனங்கள், நன்கொடையாளர்களின் உதவியுடன் பெற்றுக் கொடுத்தல். இலவசமாக கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பாராட்டுக்களை வழங்குதல்.

## 5.4 பாடசாலைக்குத் தேவையான வளங்களின் முக்கியத்துவமும் அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளும்

1. பாடசாலைக்கு வெளியில் உள்ள வளங்கள் பயன்படாமை
2. வளங்களைப் பெற்றுக்கொள்வதற்கான உத்திகளை கையாளாமை

### விதந்துரைப்புக்கள்

பாடரீதியில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை பாடசாலையில் இணைத்துக் கொள்ளல். பௌதீக வளங்களை பிரயோகிக்கும் முறைகளை ஆசிரியர்களுக்கு கற்பிப்பதற்கு செயலமர்வுகளை நடத்த வேண்டும். அதிபர் நியமனங்களில் மிகக் கடினமான முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். சமூகத்திலுள்ள வளங்களை பாடசாலைக்கு கொண்டு வருதல் வேண்டும். வைத்தியர்கள், பொறியியளாளர்கள், மேசன், தச்சன் போன்றவர்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளுதல்.சமய ஸ்தாபனங்களிடமிருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்ளல். கிராமப்புற மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவக்கூடிய உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல்.

## 5.5 பாடசாலையின் வினைத்திறனான வளப்பாவனையின் ஊடாக அடைவுமட்டத்தினை உயர்த்துவதற்கான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும்.

1. வளமாற்று வழிகளைக் கையாளாமை.
2. அதிபா்களின் மற்றும் மேலதிகாரகளின் அசமந்தப்போக்குகள்.

### விதந்துரைப்புக்கள்

குறிப்பிட்ட பாடத்தில் வேறு பாடசாலைகளில் அதிகமான ஆசிரியர்கள் காணப்பட்டால் கல்வித் திணைக்களத்தின் ஊடாக அவர்களைப் பெற்றுக் கொள்ளல். விளையாட்டு மைதானம் காணப்படாத வேளையில் ஒன்றுகூடல் வெளியைப் பயன்படுத்துதல். செயற்பாட்டறைகளை இரண்டு அல்லது மூன்று பாடங்களுக்கு பயன்படுத்துதல். தமது பாடசாலையில் காணப்படாத வளங்கள் ஏனைய பாடசாலையில் காணப்படும் போது அதனை அதிபருடன் கலந்துரையாடி பயன்படுத்துதல்.பாடசாலையில் காணப்படுகின்ற வளங்களை வினைத்திறனாக பயன்படுத்துதல். பாட ரீதியில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை மாலை நேர, இரவு நேர வகுப்புக்களை நடத்துமாறு குறிப்பிடுதல்.

### உசாத்துணை நூல்கள்


1. அருள்மொழி.செ,(2008*),"கல்வி ஆய்வு முறைகள்",* எவகிறின் பதிப்பகம்.
2. அனந்தராஜ்இ ந. 2006,*"பாடசாலை முகாமைத்துவ நுட்பங்கள்"*, குமரன் புத்தக இல்லம். பக்கம் (26,27)
3. சந்திரசேகரம்.சோ, (2002*),"இலங்கையில் தமிழர் கல்வி வளர்ச்சியும் பிரச்சினைகளும்*, கொழும்பு தமிழ்ச்சங்கம்.
4. சந்திரசேகரம்.சோ, (2004),"*கல்வி ஒரு பன்முகநோக்கு",* உமாபதிப்பகம்.

5. சந்திரசேகரம்.சோ, (2008),''*சமகாலக் கல்வி முறைகளின் சில பரிமாணங்கள்''*, சேமமடுபதிப்பகம்.
6. சின்னத்தம்பி.மா, (2008),''பாடசாலையும் சமூகமும்'', குமரன் புத்தக இல்லம்.
7. சின்னத்தம்பி.மா, (2009),''பாடசாலைகளை முகாமை செய்தல் சமகால அணுகுமுறை'', சேமமடு பொத்தகசாலை, கொழும்பு-11.
8. செல்வி. சுமதி மகேந்திரராசா, 2010. ''பின்தங்கிய பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் வளங்களின் பயன்பாடு'' (போரதீவுப்பற்றுப் பிரதேசத்திலுள்ள ஐஊ பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு) கலை, கலாசாரப்பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்.
9. https://files.eric.ed.gov/fulltext/ED578024.pdf
10. https://files.eric.ed.gov/fulltext/ED578024.pdf
11. https://www.education.gov.uk/publications/eOrderingDownload/RR799.pdf
12. https://pdfs.semanticscholar.org/80c5/8a27f63c0d9e6233518e758552f484d6e376.pdf